# திருமலை ஜெட்டியில் நள்ளிரவு தாக்குதல்; படகுகள் எரிப்பு; லொறிகளும், பல ஆயுதங்களும் கொள்ளை!

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 3 7-8-86 வியாழன் (ஆடி 22 துலக 30) முழக்கம் 184

(திருமலை)

திருகோணமலையிலுள்ள துறைமுக அதிகார சபையின் கட்டடத்தின் மீதும், ஜெட்டியின்மீதும் நேற்று முன்தினம் இரவு மூன்றுமணியளவில் இனம் தெரியாத இளைஞர் கோஷ்டியால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அச்சமயம் அங்கு காவலுக்கு நின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வைத்திருந்த ஆயுதங்களும், 'வாக்கி டாக்கிகளும்' இளைஞர்களால் பறிமுதல் செய்யப்பட்டன. துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான இரு விசைப்படகுகளும் இரு மினி பஸ்களும் இச் சம்பவத்தின்போது தீக்கிரையாக்கப்பட்டன. இதன் பின்னர் இளைஞர்கள் அங்கிருந்த இரு தொலைத் தொடர்பு வானொலிக் கருவிகளையும் ஐம்பது துப்பாக்கிரவைகளையும் அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றனர். அவர்கள் செல்லும்போது துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான மூன்று லொறிகளையும் எடுத்துச் சென்றதாக அறுவிக்கப்படுகின்றது. பாதுகாப்பு உத்தியோகத்தர்களைக் கட்டி வைத்துவிட்டு உள்ளே சென்று தாக்குதல்களை நடத்திய இளைஞர் குழுவில் சுமார் நாற்பது பேர் வரையில் அங்கம் வகித்ததாகவும், தமது வேலை முடிந்து வெளியே செல்லும் போது ஊழியர்களை அவிட்டுவிட்டுச் சென்றதாகவும் தெரியவந்துள்ளது.

## செங்கலடியில் கடத்தப்பட்ட பாடசாலை அதிபர் அமைச்சர் 'தேவா' வீடருகில் சடலமாக மீட்பு!

கடந்த சனிக்கிழமை செங்கலடியில் வைத்து இனம்தெரியாத இளைஞர் கோஷ்டியால் கடத்திச் செல்லப்பட்ட எட்டுப் பேரில் ஒருவரான பி. சிவலிங்கத்தின் (48) சடலம் நேற்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சித்தாண்டி குடியேற்றப் பாடசாலை அதிபரான இவரின் சடலம் அமைச்சர் தேவநாயகத்தின் செங்கலடி இல்லத்திற்கு அருகில் அனாதரவாக கிடக்கக் காணப்பட்டது.

சடலத்தின் அருகில் துரோகி எனக் குறிப்பிடும் அட்டையொன்றும் காணப்பட்டது. செங்கலடியில் அமைச்சர் தேவநாயகம் திறந்துவைத்த மகப்பேற்று மருத்துவ மனை திறப்புவிழா வைபவ ஏற்பாட்டில் இவர் முக்கிய பங்கு வகித்ததாகச் சொல்லப்படுகின்றது. இவருடன் கடத்தப்பட்ட மற்றைய ஏழு பிரமுகர்களினதும் நிலை தெரியவில்லை.

★ முள்ளியவளை பாடசாலையிலுள்ள

# அகதிகள் முகாம் நாளை மூடப்படும்; திடீர் உத்தரவு!

(முல்லைத்தீவு)

முள்ளியவளை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலுள்ள அகதிகள் முகாமை நாளை 8ம் திகதியுடன் மூடிவிடுமாறும், இங்குள்ள சகல அகதிகளையும் இன்றிரவுடன் வெளியேறி விடுமாறும் திடீர் உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இங்குள்ள தமிழ் அகதிகள் செய்வதறியாது திகைத்துள்ளனர்.

திருமலை மாவட்டத்தின் தென்னைமரவாடி என்ற இடத்திலிருந்து தமது உறவினர்களையும் இழந்து, உடைமைகளையும் பறிகொடுத்துவிட்டு வந்த பலரே இங்கு அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருந்தனர்.

இக்குடும்பங்களுக்கு 'வண்ணன் வயல்' என்ற கிராமத்தில் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்தி குடியேற்ற உதவி அரசாங்க அதிபர் பணிமனையும், உள்ளூர் மக்களும் முயற்சிகளை மேற்கொண்டுள்ள வேளையில் இத் திடீர் வெளியேற்ற உத்தரவு வந்துள்ளது.

மேலும் ஐந்து மாத காலம் இவர்கள் இம் முகாமில் தங்கியிருக்க வேண்டுகோள் விடுத்திருந்தனராயினும் அது நிராகரிக்கப்பட்டுள்ளது.

★ சட்டவிரோத சாராய தவறணைகள் முற்றாகத்தடை!

## அங்கீகாரத் தவறணைகளும் புதிய அனுமதி பெறவேண்டும்!

### புலிகள் அறிவிப்பு

"தமிழீழத்துக்கான சுயராஜ்யம் உருவாக்கப்படும் இன்றைய சூழ்நிலையில் தமிழீழ அரச நிர்வாகம் கட்டி எழுப்பப்பட்டுவருகின்றது. இதன் ஓர் அங்கமாக சட்டவிரோதமாக இயங்கும் சாராயத் தவறணைகள் முற்றாக எம்மால் தடை செய்யப்பட்டுள்ளன. அனுமதிப் பத்திரம் பெற்ற சாராயத் தவறணைகளும் எம்மால் பரிசீலிக்கப்பட்டு அங்கீகாரமளிக்கப்பட்ட பின்னரே இயங்க அனுமதிக்கப்படும். எனவே சாராயத் தவறணை உரிமையாளர்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்."

மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் நேற்று விடுக்கப்பட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கையின் விபரம் வருமாறு:

தமிழீழ விடுதலைப் போராட்

— 6-ம் பக்கம் பார்க்க

## தொண்டமானாறு முகாம் அகற்றப்படும்வரை சந்நிதியில் தினசரிபூஜைகளும் நடைபெறாது

(வல்வெட்டித்துறை)

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவிலின் உற்சவம், பூஜைகள் நடாத்துவது பற்றியும் தொண்டமானாறு ஆற்றின் மறுகரையிலுள்ள இராணுவ முகாமை அகற்றும் படியும் கோரி சந்நிதி ஆலய தர்மகர்த்தாக்கள் ராணுவ ஆணைப்பதிகாரியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

—6ம் பக்கம் பார்க்க

கிளிப் விலகாததால் வெடிக்கவில்லை

## கொல்வின் வீட்டுக்கு நள்ளிரவில் கிரனைட் வீச்சு!

கொள்ளுப்பிட்டியிலுள்ள லங்கா சமசமாஜக் கட்சித்தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் வீட்டுக்கு நேற்று நள்ளிரவு ஒரு மணியளவில் இனம் தெரியாதவர்களால் கிரனைட் வீசப்பட்டதாயினும், அதன் 'கிளிப்' கழற்றப்படாததால் அது வெடிக்கவில்லை.

முன்பகுதிக் கண்ணாடியை உடைத்துக்கொண்டு வீட்டு விறுந்தையில் கிரனைட் விழ்ந்ததால் நித்திரையிலிருந்த கொல்வினும், மற்றவர்களும் எழும்பினர்.

ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார் கிரனைட்டை எடுத்துச் சென்றனர். இச்சம்பவத்தை கட்சியின் செயலாளர் பெர்னாட் சொய்ஸா வன்மையாக கண்டித்துள்ளார்.

அன்னையர் முன்னணி ஆவேசம்:

## பிரசவத்தை படை அதிகாரி நேரில் பார்க்க அனுமதியா?

ஒருபெண்ணின் பிரசவத்தை ஆயுதப்படை அதிகாரி ஒருவரை நேரில் பார்க்க அனுமதித்ததையிட்டு அன்னையர் முன்னணி அதர்ச்சியடைந்துள்ளதாக அம்முன்னணி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துக்கு அனுமதியளித்த வைத்தியரையும் அந்த அறிக்கை கண்டித்துள்ளது.

ஒரு பிரசவத்தாயின் மனோநிலையை கவனத்தில் கொள்ளாத வைத்தியரின் செயல் வைத்திய சாலைகளில் பணிபுரியும் பெண் வைத்தியர்கள், பெண் ஊழியர்கள் மற்றும் பெண் நோயாளிகளையும் அச்சுறுத்துவதாக அமைவதுடன் அவர்களுக்கு பாதுகாப்பு இன்மையையும் இச்செயல் காட்டுகிறது.

நோயாளர்கள் தங்கியுள்ள வைத்தியசாலைகளில் ஆயுதப் படையினரின் இத்தகைய அடாவடித்தனம் குறித்து உடனடியாக அரசு விசாரித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டுநகரில் இரு சம்பவங்கள்:

## 4 ஊர்காவற் படையினர் புலிகளின் தாக்குதலில் பலி

மட்டக்களப்பு சென்றல் பொலிஸ் நிலையத்துக்காக ரணமடு என்ற இடத்தில் நேற்று முன்தினமிரவு 'சென்றி'க்கு நின்ற ஊர்காவற்படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டனர். இவர்களிடமிருந்த புதிய துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன.

இங்குள்ள திரியாயில் இடம்பெற்ற புலிகளின் மற்றொரு தாக்குதலில் ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவர் மரணமானார். பலர் தப்பி ஓடியுள்ளனர்.

தமிழ் குடிமக்களிடமிருந்து பொருட்களைக் கொள்ளையடிக்க ஊர்காவற் படையினர் பதுங்கியிருந்த போதே இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

### கமாண்டோ ஒருவர் பலி

மொரக்கொட்டாஞ்சேனையில் ரோந்து சென்ற பொலிஸ் கமாண்டோக்கள் மீது நேற்று தீவிரவாதிகள் கிரனைட் தாக்குதலை மேற்கொண்டார்கள். இத்தாக்குதலில் ஒரு பொலிஸ் கமாண்டோ பலியானதாக அரசு நேற்றிரவு அறிவித்தது.

வண. பிதா திஸ்ஸ பாலசூரியா பேச்சு:

# இலங்கையில் உருவான அரசியல் சட்டங்கள் தமிழர் குரலை மதித்து இயற்றப்படவில்லை!

**கண்டியில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் வண. பிதா திஸ்ஸ பாலசூரியா அவர்கள் இலங்கையின் இனப்பிரச்சினை பற்றி நிகழ்த்திய உரையை முழுமையாக இங்கு தருகின்றோம்.**

மாகாணசபை ஆட்சிமூலம் அந்தந்த மாகாண மக்கள் தங்கள் நிர்வாகத்தைத் தாமே நடத்தவும் தங்களின் தேவைகளையும் நலன்களையும் தாமே ஏற்படுத்திக் கொள்ளவும் தங்களின் இன, மொழி, பண்பாட்டு பாரம்பரியங்களைப் பேணிப்பாதுகாத்துக் கொள்ளவுமான உரிமைகளைப் பெறுவதுடன் தங்கள் பிரதேச அபிவிருத்திக்கும் திட்டம் தீட்டி செயலாற்றும் தகுதி பெறுவர்.

அரசியல் இலாபத்தையோ தேர்தல் இலாபத்தையோ எதிர் நோக்காமல் எமது மக்களின் நலத்தினை கருத்தில் கொண்டு இனப்பிரச்சினை தீர்வுக்கு சகலரும் ஒத்துழைக்க வேண்டும்.

இலங்கை ஒரு சிறிய நாடு. எனவே இது நாட்டிற்கு ஏற்புடையதல்ல என்றும் இந்தியா பெரியதொரு நாடு அங்கும் மாநில ஆட்சி தோற்றுவிட்டது என்றும் சிலர் கூறுகின்றனர்.

தமிழ் இனத்திற்குரிய தனித்துவத்தை கௌரவிப்பதினால் எமக்கு நன்மையா? தீமையா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். தலைநகரில் குவிந்து கிடக்கும் அதிகாரங்களை வடக்கு, கிழக்கு மற்றும் பகுதிகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். அப்போதுதான் மக்கள் ஐக்கியப்பட வாய்ப்பு உண்டாகும்.

நிர்வாகப் பரவலாக்கத்தை சரியான முறையில் செயல்படுத்தாததினால் இந்தியாவில் இன்று சில பிரச்சினைகள் இருப்பது உண்மைதான். அவை நிர்வாகப் பரவலாக்கல் கொள்கையால் ஏற்பட்டவையல்ல.

1972-78 ம் ஆண்டு காலங்களில் உருவாக்கப்பட்ட எமது அரசியல் சட்டம் தமிழ் மக்களின் குரலுக்கு செவிமடுத்து இயற்றப்படவில்லை. நாட்டின் விஸ்தீரணம் இங்கு முக்கியமல்ல. ஒரு இனத்தின் உரிமைகளை கௌரவித்து அதனை அங்கீகரிப்பதே முக்கியம். காலம் சென்ற பிரதமர்களான டட்லியும், பண்டாரநாயக்காவும் தமிழினத்தை மதித்து அவர்களுக்கு செவிமடுத்து ஒப்பந்த உடன்பாடுகளுக்கு வந்தனர். என்றும் அவை உருப்படவில்லை. அதன் பிரதிபலனை நாம் இன்று அனுபவிக்கின்றோம்.

1956 முதல் தமிழ் மக்கள் தொடர்ந்தும் தாக்கப்பட்டு வந்துள்ளனர். 1983 ல் அனைவரும் வெட்கித்தலை குனியும் வகையில் ஒரு இலட்சத்து இருபதினாயிரம் தமிழர்களை அடித்து விரட்டியதும் நமது நாட்டவர்கள் வெளி நாடுகளில் பிச்சை எடுத்துவாழும் நிலைக்கு கொண்டு போய் விட்டது.

இங்கிருந்து இந்தியாவிற்கு ஓடியவர்கள் உயிருக்கு பயந்தே ஓடினார்கள். அதுவன்றி அவர்கள் இந்தியா தமது தாய் நாடு என்று ஓடவில்லை. இலங்கையைதாயகமாகக் கொண்ட ஒரு இலட்சத்து இருபதாயிரம் பேரை நமது சிங்கள மக்கள் அடித்துவிரட்டியது நாம் செய்த பெரும் தவறு. இச் செயலுக்காக நாம் தமிழ் நாட்டில மன்னிப்புக் கோர வேண்டும். இச் செயலுக்காக நான்தமிழ்நாட்டில்மன்னிப்புக் கேட்டேன். இங்கு இரு இனமும் ஒன்றுபட்டு வாழவேண்டும். ஏக இலங்கைக்குள் தமிழினத்தின் உரிமைகளையும் நிலைநாட்டி சமாதானமாக வாழ முடியுமென்பதை சகலரும் உணர்தல் வேண்டும்.

நான் தமிழ் நாட்டில் தமிழ்த்தீவிர வாதிகளை சந்தித்து பேச்சு நடாத்திய போது தமிழினத்தின் அடிப்படை உரிமைகளை அங்கீகரித்து தமிழ்மக்கள் ஏற்கக் கூடிய தீர்வு முன்வைக்கப்படுமானால் அது உண்மையாகவே இதயசுத்தியாக இருக்குமானால் அத்தீர்வை நாம் ஏற்றுக் கொள்வோமென அவர்கள் தெரிவித்தனர்.

அரச படையினரும், ஊர்காவல்படையினரும் தமிழ்மக்களை கொன்று குவிப்பதனால் தான் தாங்களும் அவ்வகையான எதிர் தாக்குதல்களுக்கு நிர்ப்பந்திக்கப் படுவதாகக் கூறும் அவர்கள் அப்பாவி சிங்கள மக்களுக்கு தாம் எந்த ரீதியிலும் எதிரிகளல்ல. அவர்கள் மீது எந்த வகை பகைமை உணர்வும் கிடையாது என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

அப்பாவி மக்களின் உயிர்கள் அநியாயமாய் பலியாவதை நிறுத்த சகல கட்சியினரும் ஒன்றுதிரண்டு வலியுறுத்த வேண்டும். மனித உயிர்ப்பலிகள் நிறுத்தப் படவேண்டும். அரச பயங்கரவாதம் உட்பட அனைத்து பயங்கரவாதச் செயல்களும் நிறுத்தப்பட வேண்டும். இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள நம் நாட்டுக் குடிமக்கள் மீண்டும இங்கு வந்து சமாதானமாக வாழும் நிலையினை உருவாக்க வேண்டும். தமிழ்நாடு அரசும் இந்திய மத்திய அரசும் சமாதானத் தீர்வினை ஏற்படுத்தப் பூரண ஒத்துழைப்பு வழங்குவதற்கு முன் வந்துள்ள இச் சந்தர்ப்பத்தில் சகல அரசியல் கட்சிகளும் அதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்குவது தான் மனிதாபிமான செயலாகும்.

## ஜனநாயக மாணவர் சங்க வேண்டுகோள்

கடந்த காலங்களைப்போன்று இம்முறை பல்கலைக்கழகத்தில் ராக்கிங் போன்ற சம்பவங்கள் இடம்பெறுது தடுக்க வேண்டும் என புதிய ஜனநாயக மாணவர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக இச் சங்கம் "பல்கலைக்கழக மாணவர்களே சிந்தியுங்கள்! செயற்படுங்கள்!" என்ற பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் ராக்கிங்கை எதிர்த்து, "அனைத்து பிற்போக்குத் தனங்களையும் எதிர்த்து அனைத்து அடக்குமுறைகளையும்எதிர்த்து ஒன்றிணையுங்கள்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போட்டி முடிவுகள்

(வேலணை)

1986-ம்ஆண்டிற்கான வேலணைக் கல்வி வட்டாரப் பாடசாலைகளின் இசை, நடன, நாடகப் போட்டிகள் வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலய கலையரங்கு மண்டபத்தில் அதன் அதிபர் திரு. மு. சிவராசரத்தனம் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகள் பின் வருமாறு: சமூக நாடகம் (மேற்பிரிவு) வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை, இசை நாடகம் - புராணம் (மேற்பிரிவு) காவலூர், கரம்பன் சிறிய புஷ்ப மகளிர் மகாவித்தியாலயம், வரலாற்று நாடகம் (மத்திய பிரிவு) வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயம், நடனம் (கீழ்ப்பிரிவு) தனிப் பெண் - வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை, (கீழ்ப்பிரிவுக்குழு) பெண்கள் கரம்பன் சிறிய புஷ்ப மகளிர் மகாவித்தியாலயம், (மேற்பிரிவு) பெண் நடனம் கரம்பன் சண்முகநாத மகா வித்தியாலயம், (மேற்பிரிவு) குழு நடனம் வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயம், (மேற்பிரிவு) குழு பெண் நடனம் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை, (மத்திய பிரிவு) நடனம் கரம்பன் சண்முகநாத மகா வித்தியாசாலை, கர்நாடக இசை (மேற்பிரிவு) கரம்பன் சண்முகநாத மகா வித்தியாலயம், புராணஆக்கம் காவலூர் புனித மரியாள கல்லூரி.

## அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்,)

கோகிலா மகேந்திரன் எழுதிய 'துயிலும் ஒரு நாள் கலையும்'(நாவல) பிரசவங்கள்(சிறுகதைத் தொகுதி) அறிமுக விழா எதிர்வரும ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் நெல்லியடி ம.மத்தியாலய இராசலிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது,கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கலாசாரப பெருமன்றத் தலைவர் திரு.த. சிதம்பரபிள்ளை தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக கலாநிதி நா.சுப்பிரமணியமும் சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி எம்.கே. முருகானந்தனும் கலந்து கொள்கிறார்கள். ஆய்வுரைகளை செல்வி சந்திரா தியாகராஜா, திருவாளர்கள நெல்லை க. பேரன், கருணை யோகன், குப்பிழான் ஐ,சண்முகன், எஸ். வன்னியகுலம, தெணியான் ஆகியோர் நிகழ்த்துகிறார்கள்.

## ருதுசோபன விழா

வண்ணைகிழக்கு வீரமாகாளி அம்மன் தேவஸ்தானததில் வெள்ளிக்கிழமை காலை அம்பாளுக்கு ருதுசோபன விழாவும் மாலை கற்பூரத்திருவிழாவும் நடைபெறவுளளது. காலைஆறு முப்பது மணிக்கு வண்ணை வெங்கடேஸ்வர பெருமாள் ஆலயத்திலிருந்து சீர்வரிசை பவனி இடம் பெறும். மாலையில் ஆறுமுப்பது மணிக்கு கற்பூரத திருவிழா இடம் பெறும்.

## பண்டத்தரிப்பு சந்தியில் வெள்ளம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பிரதான சந்தி மழை காரணமாக ஓரே வெள்ளமாக காட்சியளிக்கிறது. பல காலமாக இச்சந்தி வீதி பள்ளமாக இருத்து தருத்தப் படாது இருப்பதால் மழை காலக்களில் நீர் இங்கு தங்கிவிடுகிறது. இதனால் பாதசாரிகளும், வாகனங்களும் பெரும் சிரமமடைய வேண்டியுள்ளது.

## ஆலய உற்சவம்

அரியாலை நீர்நொச்சித் தாழ்வு அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் 8-ம் திகதி வெள்ளிக் கிழமை ஆரம்பமாகி 18-ம் திகதி இரதோற்சவத்துடனும், 19-ம் திகதி தீர்த்தோறசவத் துடனும் இனிது முடிவடையும்.

## பிறந்தநாள் வாழ்த்து

❋ இணுவில் கிழக்கு, சிவசுப்பிரமணியம் செவ்வராணி தம்பதியின் மகள் சசிகலா இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ மட்டுவில் தெற்கு, தர்மலிங்கம் பகவதி தம்பதியின் மகள் துகிதா இன்று தனது பன்னிரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ வதிரி, தவராஜா செல்வமணி தம்பதியின் மகள் அனுஷா இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ கொழும்புத்துறை எழிலூர், மங்கஸ் மாலா தம்பதியின் மகள் மேகலாடிலேகா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

அதிபர் பேச்சு

## கல்வி கற்பிக்கையில் மனதில் ஓர்நிறைவு ஏற்படும்

(வேலணை)

"ஆசிரியத் தொழிலானது பல சிரமங்களை உள்ளடக்கிய போதும், மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதன் மூலம் அச்சிரமங்கள் எமக்கு சுமையாகத் தெரிவதல்ல. மாணவர்களுக்குக் கலவி போதிப்பதன மூலம் எமது மனதில் ஓர் புனிதத தன்மை ஏற்படுகின்றது. இந்த வகையில் மாணவர்கள் மத்தியில் பாராட்டுபபெற்று இன்று ஒய்வு பெறும் அதிபர் திரு. சி. இரத்தினசபாபதி ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியவர். இவர் தன்னலங் கருதாது மாணவர்களில் கல்வியே பொன்தென எண்ணி சேவையாற்றியுள்ளார். இவருக்கு நாம் பாராட்டு விழா செய்வதன் மூலம் பெருமை அடைகின்றோம். மாணவர் சமுதாயமும் மகிழ்ச்சி அடைகின்றது."

மேற்கண்டவாறு புங்குடுதீவு அரசினர்தமிழ் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி ஒய்வு பெறும் திரு. சி. இரத்தினசபாபதிக்கு மேற்படி வித்தியாலயத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவிற்கு தலைமை வகித்து உரையாற்றிய புங்குடுதீவு மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் திரு. சு. யே. பூராசா குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் ஆசிரியர் திரு. ந. தருமலிங்கம், செல்வி ஐ. சத்தியபாமா திரு. ஆ. நடேசமூர்த்தி உற்பட பலர் உரையாற்றினர். இறுதியாக அதிபர் திரு. இரத்தினசபாபதி பராட்டுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினர்.

## அடையாள அட்டைகள்

எஸ்தாக்கி அந்தோனிப்பிள்ளை (511641821V), செல்லப்பு செபஸ்தியாம்பிள்ளை (572472124V), தம்பிமுத்து தம்பிப்பிள்ளை (181661011V) வீரமுத்து யோகேஸ்வரன் (632023286V), வேலாயுதர் பிரபாகரன் (672551056V) ஆகியோரின் தேசிய அடையாள அட்டைகள் ஈழமுரசு அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளன. உரியவர்கள் பெற்றுக்கொள்ளவும்.

## தராசு படி முத்திரையிடல்

இம்மாதம் 4-ம் திகதி திங்கள் முதல் 18-ம் திகதி திங்கள் வரையும் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் தராசு, படிகளுக்கு முத்திரையிடும் வேலைகள் நடைபெறவுள்ளது, இதனால் இப்பகுதி சகல வியாபாரிகளும் இந்நாட்களில் தமது தராசுகளுக்கு முத்திரையிடுமாறு வேண்டப்படுகின்றனர்.

## மகோற்சவம்

(வேலணை)

புங்குடுதீவு பெருங்காடு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மகேற்சவம் இம் மாதம் பத்தாம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது இம்மாதம் பதினேழாந்திகதி தேர் உற்சவமும், மறுநாள் பதினெட்டாந் திகதி தீர்த்த உற்சவமும், இருபதாம் திகதி பூங்காவன உற்சவமும் நடைபெறவுள்ளது. கிரியா கலாபமணி சிவஸ்ரீ தி.ச. பால சுப்பிரமணியக் குருக்கள் கொடியேற்று வைபவத்தை நடாத்திவைப்பார்.

## இன்று

ஆவரங்கால் பரிமாறி அம்மன் தேர்த் திருவிழாவான இன்று வண்ணை சிவபாலசிங்கம் சித்தர் அவர்கள் தலையில் இளநீர் உடைப்பார்.


## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

5-8-86 அன்று முலலைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த மினி பஸ்ஸில பரந்தனில் ஏறிய பிரயாணி ஒருவர் சாரம், கடைத்திறப்புகள் இருந்த பைகப் பையை ஒருவரிடம் கொடுத்து விட்டு இறங்கிவிட்டார். தயவு செய்து இதை வைத்திருப்பவர் ஐ. யோகநாதன், வசந்தி இல்லம், மிருசுவில் அல்லது பூபாலசிங்கம் புத்தகசாலையில் ஒப்படைக்கவும். R/24648

## சவூதி அரேபியாப் பயண ஒழுங்கு

JUBAIL HARBOUR LABOURERS

சவூதி அரேபியாவில் JUBAIL துறைமுகத்தில் (LABOURER) தொழிலாளர் தரத்தில வேலை செய்ய விரும்புபவர்களுக்கு இம்மாதம் 23ந் திகதியும், 27ந் திகதியும் பிரயாணம் செய்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். விரும்புவோர் பாஸ்போட், 6 படங்கள் என்பனவற்றுடன் தாமதியாது கீழ் உள்ள முகவரியில் வந்து சந்திக்கவும்.

முகவரி:-

**K.M. வைத்தீஸ்வரன்**

கச்சாய் வீதி, கொடிகாமம்.

முக்கிய குறிப்பு:- (25 வயதிற்குக் குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.)

R/24643

## 'சாவகச்சேரி நூல்நிலைய சேவை வியாபிப்பு'

(சாவகச்சேரி)

"சாவகச்சேரி நகராண்மைக் கழகத்தின் எல்லைப் பரப்பு சுமார் ஏழுமைல் விஸ்தீரணமாக அமைந்துள்ளது. இப்பரந்த பரப்பிலுள்ள வரியிறுப்பாளர்கள் சகலரது வாசிப்புத் தேவைகளையும் ஒரே ஒரு மத்திய நூல் நிலையத்தால் பூர்த்தி செய்வது கஷ்டம். எனவே வரியிறுப்பாளர் நலன் கருதி நூல் நிலையச் சேவையையும் பரவலாக்க நகராண்மைக் கழகம் திட்டமிட்டுள்ளது."

இவ்வாறு சாவகச்சேரி நகராண்மைக் கழகத்தின் செயலதிபர் திரு ரீ. நவரத்தினராஜா நமது நிருபரிடம் கூறினார். அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது: இந் நூல் நிலையம் பரவலாக்கும் திட்டத்தின் கீழ், ஆரம்ப நடவடிக்கையாக முதலில் நுணுவில் மேற்கு, சாவகசசேரி வடக்கு ஆகிய இடங்களில் ஒவ்வோர் கிளை நூல்நிலையங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இக் கிளை நூல் நிலையங்களை அமைப்பதறகான வரை படங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப் பட்டுள்ளது. இதற்கான மதிப்பீடு வேலைகள் இப்பொழுது தயாரிப்பில் உள்ளன.

இக் கிளைகளின் ஒவ்வொன்றினதும் தளபாடங்கள், தேவையான நூல்கள் ஆகியவற்றிற்கு தலா ஒவ்வொன்றிற்கும் சுமார் மூன்று இலட்சம் ரூபா தேவைப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இக் கிளைகள் இரண்டினதும் காணிகளைப் பொறுத்தளவில் நுணுவில் மேற்கு நூல் நிலையத்திற்கு முன்னாள் பட்டின சபை உறுப்பினர் திரு. காசிப்பிள்ளை சதாசிவம் என்பவர் கண்டி பிரதான வீதிக்கு அருகாமையில் மிகவும் பெறுமதியான காணி ஒன்றில் இக் கிளைக்குத் தேவைப்படும் நிலத்தை அன்பளிப்புச் செய்ய முன்வந்துள்ளார்.

சாவகச்சேரி வடக்கைப் பொறுத்தளவில் முன்பு கோவில் ஆதனமாக இருந்து, நகராண்மைக் கழகத்திற்குக் கையளிக்கப்பட்ட மடத்தடிக் காணியில் நிறுவப்படும். ஆரம்பத்தில் இரு கிளைகளை ஆரம்பித்து, காலப் போக்கில் மேலும் கிளைகளைப் பரவலாக்கலாம்.

## கடல் வலயச் சட்டங்களினால்
### சங்கு கடலட்டை ஏற்றுமதியும் பாதிப்பு!

(பண்டத்தரிப்பு)

கடற்பாதுகாப்பு வலயத் தடையால் சங்கு ஏற்றுமதியும், கடலட்டை ஏற்றுமதியும் தடைப்பட்டுள்ளது. இத்தொழிலை நம்பி வாழ்ந்த பலநூறு குடும்பங்கள் வாழ முடியாமல் பெரும் கஷ்டப் படுகின்றனர். இதனால் நாட்டிற்கு பல கோடி ரூபா அந்நிய செலாவணிச் சம்பாத்தியம் நஷ்டமேற்பட்டு உள்ளூர் மீனவர் தொழிலும் பாதிப்புற்றுள்ளது.

"தேசிய வருவாய்ப் பாதிப்பையும், கடற் தொழிலாளர் கஷ்டத்தையும் நீக்க வடபகுதி கடற் பிரதேசத்தில் பகலில் ஐந்து ஆறு மணித்தியால நேரத்திற்கு குறிப்பிட்ட சில பகுதிகளில் மீனவரை தொழில் செய்யவிட்டு அந்நேரங்களில் கடற்படையோ இராணுவமோ குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு அண்மையில் நடமாடுவது தடை செய்யப்பட வேண்டும்" என ஜனாதிபதியைக் கோரும் ஒரு மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்ப உத்தேசித்துள்ளதாக, முன்னாள் வட்டுக்கோட்டை கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க செயலாளரும், ஆனைக்கோட்டை சாவற்காடு கடற்றொழிலாளர் சங்க ஏற்றுமதி முயற்சிக்குழு உறுப்பினருமான நாகநாதர் பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

'சங்கு, கடலட்டைஏற்றுமதி மூலம் தளப்படி இன்றி வாழ்ந்த மீனவர் தமது முயற்சியால் கடலட்டை, சங்கு ஏற்றுமதிக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து ஊக்குவிப்பு பணமாக பல ஆயிரம் ரூபா சன்மானம் பெற்றவர்கள் இன்று செய்வது என்னவெனத் தெரியாது பரிதவிப்பது மிக மிகக் கவலைக்குரிய விடயம்' எனவும் பெரும் கவலை தெரிவித்தார்.

## கூட்டுறவினால் நாட்டிற்கு உயர்வு ஏற்படுவது நிச்சயம்

(சாவகச்சேரி)

பாவனையாளரின் திருப்தியே எமது, தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கத்தின் முக்கிய நோக்கம். இந்த அடிப்படையிலேயே, பாவனையாளரின் வசதிக்காக அவர்களின் சுகாதாரத்திற்காக இப்புதிய தவறணையை இன்று திறந்து வைக்கிறோம். இதற்குப் பாவனையாளர் பூரண ஒத்துழைப்பைத் தர வேண்டும்".

இவ்வாறு மட்டுவிலில் புதியதொரு தவறணையைச் சம்பிரதாயப்படி, மங்களவிளக்கேற்றி திறந்து வைத்து உரை நிகழ்த்திய கூட்டுறவுப் பரிசோதகர் திரு. நவரத்தினம் கூறினார்.

சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கத தலைவர் திரு. பொ. சின்னராஜா தலைமையில் இத் திறப்பு விழா நடைபெற்றது.

இங்கு புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு, புதிய தவறணை ஆரம்பிக்கப் பட்டிருந்தது. திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் "கூட்டுறவு மூலம் நாட்டின் முன்னேற்றத்தையும் வளத்தையும் உயர்த்த முடியும். ஆகவே நாம் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் பாவனையாளரின் வசதிக்காக இப்புதிய கிளைத் தவறணையைஆரம்பித்துள்ளோம். இதை மேன்மேலும் வளர்க்க வேண்டிய பொறுப்பு பாவனையாளர்களுக்கு மட்டுமல்ல (சீவல் தொழிலாளர்களுக்கும்) உண்டு" என்றார்.

தலைவர் சின்னராஜா, உப தலைவர் திரு கிட்டினர், பொது முகாமையாளர் உட்பட பலர் இத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

ஏராளம் பாவனையாளரும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

---

## மொழித்தேர்ச்சி, ஆக்கத்திறனை வளர்க்க வாசிப்புப் பழக்கம் அவசியம்

(அரியாலை)

"மொழித்தேர்ச்சி, ஆக்கத்திறன் ஆகியவைகளை வளர்க்க வாசிப்புப் பழக்கம் அவசியம். எங்கள் உணர்வுகளை வெளிக்கொணரும் ஊதழ்களாக கையெழுத்துப் பத்திரிகைகள் விளங்குகின்றன. எங்கள் சூழ்நிலைதான் எங்கள் ஆக்கங்களை நிர்ணயிக்கவேண்டும்."

"அறிவொளிக்கலை" ஆறாவது இதழ் வெளியீட்டு விழாவில ஆய்வுரை நிகழ்ததிய திரு. த. கலாமணி இவ்வாறு கூறினார். அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய வெளியீடான அறிவொளிக்கலையின் நூறாவது இதழ் வெளியீட்டு விழா முத்தமிழ் அரங்கில திரு. ப. சசிதரன் தலைமையில் நடைபெற்றது.

திரு. செம்பியன்செல்வன் வெளியீட்டுரை நிகழ்த்தினார். முதல் பிரதியை திரு. வே. க. பாலசிங்கம் பெற்றார்.

ஆசிரியர் திரு. சீ. வைகுந்தசாமி அவர்கள் தமதுரையில் "இக் கையெழுத்துபபத்திரிகை நாற்பத்தைந்தாவது இதழில் இருந்து 'அறிவொளிக்கலை' என்னும் பெயருடன் வெளிவந்து கொண்டிருக்கிறது. அதற்கு முன்பு 'அறிவொளி' என்ற பெயருடனேயே வெளிவந்தது" என்றார்.

இப்பத்திரிகையின் ஆரம்ப ஆசிரியர் திரு. இ. அரசகேசரி அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"இப்பத்திரிகையின் முதலாவது இதழ் 1971-5-28ம் திகதி வெள்ளிக்கிழமைவெளிவந்தது. சமுதாயத்தில் இலைமறைகாய்போல் இருககும் எழுத்தாளர்களை வெளிக்கொணரும் நோக்கத்திற்காகவே இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. இதன் வளர்ச்சி படிமுறையானதாகும்" என்றார்.

இவ்விழாவில் திருவாளர்கள் கவிஞர் வே. ஐயாத்துரை, ந. இராமநாதன், ஐ. வரதராசா, செ. இராசரத்தினம், திருமதி ஸ்ரீ தயாவதி ஆகியோர் ஆசியுரை கூறினர்கள். ஆசிரியர் திரு. வே. க. பாலசிங்கம், "நான்" பத்திரிகை இணை ஆசிரியர் திரு. யோசப் பாலா, திரு. வளவைவளவன், திரு. எஸ். புவனேந்திரன், திரு. ஏ. வீரசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்கள். திருமதி பாலசிங்கம் அவர்கள் பரிசில் வழங்கினர். அறிவொளிக்கலை தற்போதைய ஆசிரியர் செல்வன் த. குமரேஸ்வரன் நன்றியுரை நிகழ்த்தினர்.

## சுற்றுப் போட்டி

(சுன்னாகம்)

சுன்னாகம் சரஸ்வதி சனசமூக நிலையத்தால் நடாத்தப்படும் ஏழு பேர் கொண்ட நொக்அவுட் முறையிலான உதைபந்தாட்ட முதல் சுற்றுப் போட்டிகள் யாவும் முடிவடைந்தன. இரண்டாவது சுற்றுப் போட்டி 3-ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. புதன், சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் பிற்பகல் 3-30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் இப்போட்டிகளை நூற்றுக்கணக்கான மக்கள் கண்டுகளித்து வருகின்றனர்.

## திருமதி தையல்நாயகி இராமநாதர்
## மாணவர் தேவையறிந்து திறமையாகக் கற்பித்தவர்

'வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கல்வி கற்ற மாணவர் பலர் உலகின் பல நாடுகளில் சிறப்புடன் வாழ்கின்றனர். அந்த நாடுகளில் இன்று நல்ல தமிழ் ஒலிக்கின்ற தென்றால் அதற்குத் திருமதி தையல் நாயகி இராமநாதன் அவர்களும் ஒரு காரணராவர். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இவ்வித்தியாலய மாணவர்களுக்குத் தமிழ் போதித்தவர்களுள் அவர் குறிப்பிடத் தக்கவர். இவ்வகையில 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்' என்ற பாரதியின் பணிப்பை ஆசிரியை திருமதி இராமநாதன் நிறைவேற்றியுள்ளார்' என வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் பல ஆண்டுகளாக ஆசிரியப் பணி புரிந்து ஓய்வு பெற்ற திருமதி தை. இராமநாதன் அவர்களின் சேவை நலன் பாராட்டு விழாவில் பேசிய ஆசிரியை திருமதி செ. பொன்னுச்சாமி குறிப்பிட்டார்.

வித்தியாலய ஆசிரியர் நலன் புரிச்சங்க ஆதரவில், சங்கத் தலைவர் திரு வி. சு. பாலசிங்கம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

அதிபர் திரு. சி. சிவசரவணபவன் பேசுகையில் "மாணவர்களின் நிலையையும் தேவையையுமுணர்ந்து, ஏற்ற முறைகளைக் கையாண்டு திறமையுடன் கற்பித்த திருமதி இராமநாதன் அவர்களை வைத்தீஸ்வர வித்தியாலயச் சமுதாயம் என்றுமே மறக்காது. முதலில் வித்தியாலய மாணவர்கள் பிரியாவிடைப் பெருவிழாவை நடத்தினர். அதையடுத்து பழைய மாணவர் சங்கததினர் தனியாக விழா எடுதது ஆசிரியையைக் கௌரவிதது வெள்ளிக் கேடயம் வழங்கினர். இப்போது ஆசிரியர்கள் பாராட்டு விழா நடத்துகின்றனர்" என்றார்.

கல்வித் துறையில் மட்டுமல்லாமல் இணைப்பாட வேலைகளிலும் புற வேலைகளிலும்திருமதி இராமநாதன் உற்சாகமுடன் ஈடுபட்டுழைத்ததைத் துணை அதிபர் திரு. சி. இராசதுரை பாராட்டிப் பேசினர். திருமதி இராமநாதனின் பதிலுரையை அடுத்து சங்கச் செயலாளர் திரு. ந. பாக்கியராசா நன்றி கூறினர்.

---

### கம்பன் விழாவில் பண்டிதர் சச்சி பேச்சு:
## தமிழ் மன்னர்கள் அரசாண்ட நல்லூரில் தமிழ் ராஜ்யம் இருந்தது!

(அரியாலை)

"நல்லூர் மண் தமிழ் அரசர்கள் ஆண்ட பூமியாகும். முன்பு தமிழ் இராச்சியம் ஒன்று இருந்தது. ஒரு பெரிய இராச்சியததிற்குச் சொந்தமானவர்கள் நாம். போர்த்துக்கேயர் காலத்திற்கு முன்பிருந்த நிலையைததான் இன்று நாம் கேட்கிறோம். 1958ம் ஆண்டு இனக்கலவரம் நடைபெற்றது. 1961ம் ஆண்டு யாழ். கச்சேரி முன்பாக ஒத்துழையாமை இயக்கம் நடைபெற்றது. சுதந்திரத்திற் பங்கு கொள்ள வேண்டும் என்பதற்காக, வீதியில் பெண்கள் அணி அணியாகச் சென்றார்கள். அன்றைய கன்னியரின் கருவில் உருவான குழந்தைகள் இன்று உயிர் கொடுக்கிறார்கள். வரிகள் கவிதைகள் ஆகிவிடமாட்டாது. வசன கவிதைகள் புதியனவல்ல. அவை சிலப்பதிகாரத்தில் உண்டு. தபால்கள் கூட சில வேளைகளில் கவிதையாகி விடுவதுண்டு. தண்ணென்ற ஓசை கவிதையில் இருக்க வேண்டும்".

"இவ்வாறு பண்டிதர் திரு. க. சச்சிதானந்தம் அவர்கள் அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் கம்பன் விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழா நல்லை ஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றது. லய ஞான சிரோன்மணி ஆர். புண்ணிய மூர்த்தி குழுவினரின் மங்கள இசை நடைபெற்றது. திருவாளர்கள் ஆர். புண்ணிய மூர்த்தி, க. ஆனந்தகுமார் ஆகியோர் மங்கள விளக்கேற்றினர்கள், திரு. நாக. பரமசாமி தேவாரம் பாடினர். தமிழ் வாழ்த்து இசைக்கப்பட்டது. அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:-

"நல்லியல்புகள் பாராட்டப்பட வேண்டும். திரு. பொன்ட் அவர்களுக்கு யாழ்ப்பாணமே கடமைப்பட்டிருக்கிறது. கவிஞர் வே. ஐயாத்துரை எங்கள் குடும்பத்தின் மூத்த தந்தை அழகர், அறிஞரான முருகையனின் பெயரைக் கேட்காதவர்கள் இருக்க முடியாது. அவர் கவி அரங்கிற்கு இன்று தலைமை தாங்குகிறார்" என்றார்.

கவிஞர் திரு. வே. ஐயாத்துரை அவர்கள் கவிதை மூலம் தொடக்கவுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது;-

"கால் நடக்க முடியாத என்னைப் படுக்கையில் கிடக்க விடாது, தொடக்கவுரை செய்யக் கேண்மையுடன் காரில் கடத்தி வந்தது கம்பன் கழகம்" என்றார்.

மண்டபம் நிறைந்த சனக்கூட்டம் காணப்பட்டது. வீதியிலும சனம் குழுமி நின்று நிகழ்ச்சிகளை இரசிதததது. கவி அரங்கம் சிரிப்பொலியின் மத்தியிலும், பலத்த கரகோஷத்தின் இடையிலும் நடை பெற்றது. நன்றியுரை வழங்கப்பட்டது.

## யானை இனம் குறைகின்றது

இலங்கை வனவிலங்குகளில் முதலிடத்தை பெற்ற யானை இனத்தின் தொகை கடந்த பல வருடங்களாக பெருமளவில் குறைந்து வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றின் தொகை தற்பொழுது சுமார் மூவாயிரத்தினால் குறைவடைந்துள்ளது. யானைகளின் வசிப்பிடங்களாக இருந்து வந்த காடுகள் பல்வேறு தேவைகளின் பொருட்டு அழிக்கப்பட்டு அவற்றின் இடம் பெயரும் வழி, இயற்கைச்சூழல் என்பன தடைப் பட்டதிலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

## குறைகளைவு

(வேலணை)

புங்குடுதீவு கோட்டைக்காட்டுப்பகுதிக்கு இதுவரை இருந்து வந்த மின்சாரக் குறைபாடு தற்போது நீங்கியுள்ளது. மின்சாரம் இன்மையால் இப் பகுதி மக்கள் இருளில் தவித்தனர் தற்போது கோட்டைக் காடு இரண்டாம் வீதிக்கு இலங்கை மின்சார சபை வேலணை டிப்போவினால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் மேற்படி வீதி மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றார்கள்.

### உதய சிந்தனை

பணம் இருந்தால் உங்களையே உங்களுக்கு தெரியாது.
பணம் இல்லாவிட்டால் ஒருவருக்கும் உங்களை தெரியாது.
—ஸ்பானிய பழமொழி.

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

## இதய ஒலி

7-8-86 வியாழக்கிழமை (அக்ஷய) ஆடி 22

# "வெள்ளை யானை"கள் அழிக்கப்படுகின்றன.

நஷ்டத்தில் இயங்குவதாகக் கூறப்படும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சபைகள் போன்றவைகளுக்கு மூடுவிழா நடத்தும், அல்லது தனியார் துறையிடம் கையளிக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் இப்போது மிகத்துரிதமாக மேற்கொண்டு வருகின்றது.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் முன்னைய அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட பல கூட்டுத்தாபனங்கள், சபைகள் இவ்வாறு இழுத்து மூடப்பட்டன.

அரசாங்க மா ஆலைக் கூட்டுத்தாபனம் போன்ற பெரிய நிறுவனங்கள் இவ்வாறு மூடப்பட்டவேளையில், தனியார் துறையினரால் பிரிமா மா ஆலை போன்றவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கைப் போக்குவரத்துச்சபையில் ஆட்குறைப்பு சில வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் மத்திய போக்குவரத்துச் சபை என்று ஒன்று உருவாக்கப்பட்டது.

இது இன்றைய அரசாங்கத்தின் பிரசவங்களில் ஒன்று. கடந்த மாதத்துடன் அதுவும் கூட மூடுவிழாவைக் கண்டுள்ளது.

இதனை இழுத்து மூடியமைக்கு சம்பந்தப்பட்ட அமைச்சரும், அதிகாரிகளும் என்ன தான் காரணத்தைச் சொன்னாலும் ஊழல், நிர்வாகத் திறனின்மை, விரயம் போன்றவைகள் தான் காரணம் என்பதை மறுக்க முடியாது.

இப்போது மேலும் மூன்று அரசாங்க கூட்டுத்தாபனங்களை மூடி விடுவதற்கு பாராளுமன்றம் அனுமதி கொடுத்துள்ளது.

இலங்கை புகையிலை கைத்தொழில் கூட்டுத்தாபனம், தேசிய பொதியிடும் கூட்டுத்தாபனம், அரசாங்க உர உற்பத்திக் கூட்டுத்தாபனம் ஆகியவையே மேற்குறிப்பிட்ட மூன்று கூட்டுத்தாபனங்களுமாகும்.

இவை லாபகரமாக இயங்காததால் மூடப்படவேண்டியுள்ளது என்று இதற்கான பிரேரணை மீது நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசும் போது கைத்தொழில் அமைச்சர் திரு. டென்ஸில் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

இதனை மறுவார்த்தையில் சொல்வதானால் இவை நஷ்டத்தில் இயங்கியதால் மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டது என்று சொல்வதே சரி.

புகையிலைக் கைத்தொழில் கூட்டுத்தாபனம் போன்றவை இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், சிறில் மத்தியூ கைத்தொழில அமைச்சராக இருந்தபோது உருவாக்கப்பட்டவை.

தனியார் வசமிருந்து சிரர்க இயங்கிவந்த பீடிப்புகையிலை இறக்குமதியைப் பறித்து, தமது 'பந்தம்' காரருக்கு கோட்டா கொடுத்து அவர்களை "பூர்ஷீவா"க்களாக்குவதற்காகவே இக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது.

ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலிருந்தே இக்கூட்டுத்தாபனம் சீராக இயங்கவில்லை. 'சேவை' என்பதைவிட்டு, 'பிஸினஸ்' என்பதை கருத்தில் கொண்டு இயங்கியதால், நஷ்டக் கணக்கை அரசாங்க கணக்காக்க நிதி அமைச்சர் ரொனி டி மெல் அனுமதிக்கவில்லை.

கூட்டுத்தாபனங்களுக்கு நிதியுதவி வழங்க மறுத்த நிதி அமைச்சர், நஷ்டத்தில் இயங்குபவை மூடப்படும் என்று கடந்த வருடமே முன்னெச்சரிக்கை செய்திருந்தார்.

இதன்படி இப்போது மூன்று கூட்டுத்தாபனங்கள் தமது கதவுகளை இழுத்து மூட வேண்டிய நிலைபரம் ஏற்பட்டுள்ளது.

இவை மூன்றும் தான் நஷ்டத்தில் இயங்குபவை என்று கூறமுடியாது

எயர்லங்கா போன்ற மிகப்பெரியநிறுவனங்கள் கூட ஊழல், விரயம் ஆகியவைகளில் சிக்கிச்சீரழிந்து வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடபகுதி ரயில்சேவை ரத்தானதால் புகையிரத இலாகாவும் நஷ்டத்தில் இயங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ரயில் சேவையும் தனியார் கைக்கு மாறலாம் என்று கூறப்படுகின்றது.

"காலக்கிரமத்தில் அரசாங்கத்தையே தனியார் துறையிடம் ஜனாதிபதி ஒப்படைக்கலாம்" என்று எதிர்க்கட்சி எம். பி. ஒருவர் சில காலத்துக்கு முன்னர் தெரிவித்ததும் இங்கு நினைவு படுத்தப் படவேண்டியது.

அதற்கு முன்னர் நஷ்டத்தில் இயங்கி வரும் "வெள்ளை யானைகளை" அழிக்கும் வேலை இப்போது ஆரம்பமாகியுள்ளது

'த ஐலன்ட்' பத்திரிகையின் 3ம் திகதிய ஞாயிறு இதழில் வெளியான அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் பேட்டியின் முக்கிய பகுதி கேள்வி- பதில் வடிவத்திலேயே இங்கு மொழி பெயர்த்துத் தரப்படுகின்றது. பேட்டி கண்டவர் ஐலன்ட் நிருபர் கியூ. இஸ்மாயில்.

# போரில் ஈடுபட்டுள்ளோரும் அரசியல் வாழ்க்கையில் நம்பிக்கை உடையவர்கள்

வினா; பேச்சுக்களுக்கு முன் இராணுவ மேலாதிக்கம் எய்தப்படுதல் வேண்டும் என நீங்கள் கூறிவந்தீர்களே ......

பதில்: நாங்கள் கூறியதை மிகத் தெளிவாக நாம் நிரூபித்துவிட்டோம். இராணுவ வெற்றி ஈட்டும் நம்பிக்கை பயங்கரவாத இயக்கங்களுக்கு இருக்க இடம் கிடையாது: அவற்றுக்கு நாம் அதனை நிரூபித்துக் காட்டியுள்ளோம்; அத்துடன், பலப் பிரயோகத்தினால் தனிவேறான ஓர் அரசை நிறுவவும் அவர்களால் முடியாது; அல்லது, யாழ்ப்பாணத்தை விட்டு இராணுவத்தை வெளியேற்றக்கூட அவர்களால் முடியாது; இதைத்தான் நாம் சொன்னோம்.

நுள்ளுவதும் கிள்ளுவதும், சிறு ஊசியாற் குற்றுவதும் போலும் செயல்களை அவர்கள் தொடர்ந்து செய்துகொண்டு இருக்கலாம். இருந்தும், அரசியல் வகையில் நாம் நிறுவக்கூடிய கட்டுப்பாட்டின் உச்ச அளவு இன்னமும் முற்றாக நிறுவப்படவில்லை. அப்படியிருந்தும், இணக்கப் பேச்சுக்களுக்கான அவசியம் இருந்தேதீரும்.

வினா: அப்படியானால், இராணுவம் வசிக்கக்கூடிய பங்கிற்கு இன்னமும் இடமுண்டு என நீங்கள் உணர்கிறீர்களா?

பதில்: ஆம். காரணம், பயங்கரவாத இயக்கங்கள், அல்லது அவைகளுட் சில தாம் இராணுவ வெற்றியீட்டலாம் என்ற எண்ணத்தைப் பற்றிப் பிடித்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்தமாதிரியானவற்றில் இல இயக்கங்கள் இன்னமும் ஒரு கண் வைத்திருக்கிறார்கள். இதனை நாம் அறிந்துகொள்வதற்கு எம்மிடம் போதிய வேவுத் தகவல்கள் உள்ளன.

ஆனால் அவற்றை விட மிதவாதிகளான (அதாவது நடுத்தர மார்க்க வழி செல்வோர்) இயக்கங்களும், நிச்சயமாக ஓர் இராணுவத் தீர்வு இருக்க முடியாது என்ற பார்வைக் கோணத்திற்கு வந்துள்ளனர். அப்படிதான் தெரிகிறது. ஆகவே, ஓர் உடன்பாடுகாண அவர்கள் ஆவல் மிகக் கொண்டிருக்கின்றனர். இதிலிருந்து கிடைக்கும் நன்மை என்னவெனில், எவ்வளவோ உயிர்கள் காப்பாற்றப்படும்.

வினா: தொடர்ந்தும் போர் புரிய விரும்பும் ஓர் இயக்கத்தின் பெயரை நீங்கள் குறிப்பிடுவீர்களா? நீங்கள் கருதுவது தமிழ் ஈழ விடுதலைப் புலிகளையா?

பதில்: பெரும்பாலானோர் கருதுவர். ஆனால், இக் கட்டத்தில் எல்லோருக்கும் கதவைத் திறந்து வைத்திருக்க நான் விரும்புகிறேன். ஆனபடியால் எவரையும் பெயர் சொல்லிக் குறிப்பிடுவதால் சமாதான நோக்கம் நிறைவேறுமென நான் நினைக்கவில்லை.

வினா: உங்கள் வேவுத் தகவல் அறிக்கைகள் இன்னுமொன்றையும் உங்களுக்குத் தெரிவித்திருத்தல் வேண்டும். ஓர் அரசியற் கட்சியை உருவாக்கும் நோக்கத்துடன் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் அனேக ஆட்களுடன் தொடர்பு கொண்டு வருகின்றனர் என்பதையே நான் குறிப்பிடுகிறேன்.

பதில்: அது தமிழீழ விடுதலைப் புலிகள்தானா என நான் அறியேன். ஆனால் இதனை மட்டும் நான் அறிவேன். சாத்தியமான ஓர் அரசியல் ஒழுங்கமைப்பையிட்டுச் சிலரின் உள்ளக் கிடைக்கையை (மனதில் ஆழமாக உள்ளதை) பயங்கரவாத இயக்கங்கள் சில அறிந்து கொள்ள முனைந்திருக்கின்றன. எம் மிடமுள்ள சில தகவல் துணுக்குகளை வைத்துக் கொண்டு எதனையும் உறுதியாக எடுத்த எடுப்பிலேயே முடிவுகட்ட, அவை போதிய ஆதாரமானவையல்ல. ஆனால் அது சரியாக இருக்குமானால் அது மிக நல்ல ஒரு சகுனம் ஆகும்.

வினா: தீர்வொன்றை அமுல் நடத்துவதைத் தொடர்ந்து எழக்கூடிய பிரச்சினைகளைக் குறிப்பிட்டீர்கள். பரஸ்பர நம்பிக்கையின்மை அவற்றுள் அடிப்படையானதென்று, அதனையடுத்து இரு தரப்பிலும் உத்தரவாதங்களுக்கு அவசியம் ஏற்படும். இலங்கை அரசாங்கம் அவர்களுக்கு அளிக்க வேண்டிய உத்தரவாதங்கள் யாவை? அவர்கள் உங்களுக்குத் தரவேண்டியவை?

பதில்: இவ்வளவு முன்னதாகவே விபரங்களுக்கு இறங்குவது மிகக் கடினம் என நான் நினைக்கிறேன். ஏதோ ஒருவித அமுலாக்க ஒழுங்குகள் இருத்தல்வேண்டும் என்பதுமட்டும் திண்ணம். நெருக்கமான ஒரு கருத்துப் பரிமாற்றமும், ஒப்பாசாரமான ஒரு கட்டுக்கோப்பும், ஏற்படுத்தப்படுவது அவசியமாக இருக்கும்.

பரஸ்பர அவநம்பிக்கை சிறிது சிறிதாக நீங்கத் தொடங்குதல் வேண்டும். அதற்கு, ஓர் உடன்பாடு பயனும், அவசியமும், முக்கியமும் ஆனது எனும் எண்ணம் இருசாரார் மனதையும் பூரணமாக ஆட்கொள்ளுதல் வேண்டும். கருத்துப் பரிமாற்றத்தின் போது இது நிகழுதல் வேண்டும். அப்படி நிகழுமாயின், அத்தகைய ஓர் உடன்பாட்டிற்குவர இரு தரப்பினரும் முயல்வது அவசியம் என்ற எண்ணம் உதயமாகும். அவ்வேளைதான் அவநம்பிக்கை பெரும்பாலும் அகலுறும். எப்பொழுதும் இதற்கு உட்படாத இரண்டொருவர் இருக்கத்தான் செய்வர். ஆனால் இவை எல்லாவற்றின் உள்ளும் பொதிந்த ஆபத்து அதுதான்.

வினா: ஆயுதங்களைக் கீழே வைத்தல் என்பது ஒன்று. அவற்றைக் கையளித்தல் வேறொன்று. இவை இரண்டிற்கும் இடையே நீங்கள் வேறுபாடு பாராட்டுகிறீர்களா? நாம் ஒரு தீர்வுகாண முயல்வோம். முயன்றுபார்த்து அது நன்கு செயற்படக் கண்டோமானால் பின்னர் ஒரு குறித்த கட்டத்தில் கையளிப்போம். இப்படி அவர்கள் சொல்வார்களானால்......?

பதில்: ஆயுதங்களைக் கீழே வைத்தல் அல்லது போடுதல் என்பதன் அர்த்தம், பலப் பிரயோகம் செய்யோம் என்பது தான். அது வெளிப்படை அல்லவா? ஆயுதக்கையளிப்புக்கு முன்னர் அது நிகழ்ந்துவிடுவது கட்டாயமாகும்.

எதுவித உடன்படிக்கையும் செயற்படுத்தப்படுவதற்கு, அமுலாதற்கு, இக்கையளிப்பு மிக அவசியம் ஆகும். கடைசிக் கட்டமாக இவர்கள் சட்ட விரோதமாகப் படைக்கலங்களைப் பெற்று வைத்திருக்கிறார்கள். சட்ட பூர்வமான ஒரு சக்தியிடம் இவை கையளிக்கப்படுவது உடன்படிக்கை அமுலுக்கு இன்றியமையாதது. கையளிப்பு இல்லாமல் அமுலாக்கம் இருக்க முடியாது. அதுதான் உலகில் எல்லா நாடுகளிலும் இடம்பெறும் ஒழுங்கு.

மிக அண்மையில் நடைபெற்ற இத்தகைய ஒரு சம்பவம் இந்தியாவில் இடம்பெற்றது. மிஸோ மக்கள் இந்ய அரசிடம் தமது ஆயுதங்களைக் கையளித்தனர்.

பகைமை நிறுத்கத்திற்கும் ஆயுதங்களின் கையளிப்பிற்கும் இடையே எவ்வளவு கால இடைவெளி இருத்தல் வேண்டும்? இவ்விடயத்தை வசதிபோல் ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

வினா: புனர்வாழ்வு அளித்தல் போன்ற கருமங்களையிட்டு நீங்கள் சிந்தனை செலுத்தி இருக்கிறீர்களா?

பதில்: விபரமாக இல்லை. ஆனால் குறிக்கோள்களையிட்டு நாம் தெளிவான சிந்தனை உடையோம்.

ஓர் உடன்பாடு முழுமையாக அமுலாக்க, அல்லது செயற்படுத்தப்பட்டது எனக் கருதப்படுமுன்னர் தத்தமதுவாழிடங்களினின்றும் இடம்பெயர்க்கப்பட்ட அனைவரும்—சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் யாபேரும்—அவரவர்கள்முன்னைய இடங்களில் திரும்பவும் கொண்டு சேர்க்கப்பட வேண்டி இருக்கிறது.

தீர்வு காணுதற்கான பிரேரணைகள் பல குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்தோடு வகுக்கப்பட்டு உள்ளன. இடம்பெயர்க்கப்பட்டவர்களை அவரவர்களது மனைகளுக்கு மீட்டும் கொண்டு சேர்த்தல் அக் குறிக்கோள்களுள் ஒன்று.

வினா: போராளிகள் பாடு எப்படி?

பதில்: அதன் அர்த்தம்?

வினா: உடன்படிக்கையின் பின்னர் அவர்களுக்கு என்ன நடக்கும்?

பதில்: இது விடயமாக ஜனாதிபதி வாய்மொழிந்தவை பதிவாகியுள்ளன; எல்லாம் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்பு, பொதுவான மன்னிப்பு இருக்கும். படிப்படியாகக் கருமங்களை முன்னேற்றி, 'நடந்தவை நடந்தேறிவிட்டன' எனக் கூறும் ஒரு கட்டத்திற்கு நாம் வரவேண்டியிருக்கிறது.

நஷ்டஈடு கொடுபட வேண்டியோர், புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டியோர், மீளக் குடியமர்த்தப்பட வேண்டியோர் இருக்கிறார்கள். எனது சொந்த அபிப்பிராயப்படிக்கு,

—5-ம் பக்கம் பார்க்க

★ மகோற்சவ காலக் கட்டுரை

## அரியாலை பிரப்பங்குளம்

# மகாமாரி அம்மன்

உலகில் சிவசக்தியாகி, அணுவில் இலத்திரன் புரோத்திரனுமாகி, அதிரும் இலத்திரனை மின்சாரமாக்கி, உலகையே வாழவைப்பவள் மகாமாரி அம்பாள் ஆகும். ஒரு பொருளின் கருவையே மாற்றி, வேறுபொருளாக மாற்றியமைக்கக் கூடிய வல்லமை கொண்டவள்தான் மாகாமாரி அம்பாள். அவள் உறையும் திருத்தலங்களிலே தொன்மையும் சிறப்பும் கொண்டது அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலயம்.

தமிழ்மொழிக்கும், சைவசமயத்துக்கும் அயராதுழைத்த ஆறுமுகநாவலர் பெருமான் நல்லூரிலிருந்து தற்போதைய நாவலர் வீதியால் நடந்து வந்து, மாம்பழம் சந்தியைத் தாண்டி, கண்டி வீதியைக் குறுக்கறுத்து இலந்தைக்குளம் வீதியில் கால் மைல் தூரத்தில் அமைந்திருக்கும் நாச்சிமார் ஆலயத்தில் தொண்டாற்றி, அங்கு வளர்ந்தோங்கி நிற்கும் மருதமரநிழலில சிறிது இளைப்பாறித் தன் தொண்டுகளைச் செய்தார்.

இப்பழம் பெருமை மிக்க ஆலயம் அக்காலத்தில் நாச்சிமார் கோவில் என்று அடியார்களால் அழைக்கப்பட்டது. அவ்வடியார் பக்தியுடன்வேண்டியதை அப்படியே அருளும் அருப்பெருங் கடவுளாகத் திகழ்ந்தார்.

முன்பு தனியொருவரின் ஆளுகையில் இருந்த இவ்வாலயத்தை இவ்வூர் மக்கள் பாரமேற்று, ஒரு பரிபாலன சபையைத் தெரிந்தெடுத்துக் கோயிலைச் சிறப்பாக இயக்குகின்றனர். அம்பாளின் திருவருளினுலும் அவ்வூர் மக்களின் ஓயா ஒத்துழைப்பினுலும் மூலஸ்தானம் தவிர்ந்த ஏனைய பிரிவுகள் அகற்றப்பட்டுப் புதிதாக விநாயகர், சுப்பிரமணியர், சண்டேஸ்வரர், வைரவர் முதலான பரிவாரமூர்த்தி கோவில்களும், மகாமண்டபம், சபாமண்டபம், கொடிஸ்தம்பம், வசந்த மண்டபம், யாகசாலை, மடைப்பள்ளி, உள்வீதி மண்டபம், மணிக்கோபுரம், முன்மண்டபம் யாவும்புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. மூலஸ்தானமும், தூபியும் புனருத்தாரனம் செய்யப்பட்டு சிறப்பாக அமைந்துள்ளன. புதியதோர் அசையாமணியும் பொருத்தப்பட்டுள்ளது. ஆலயமெங்கும் சிற்ப, நிற வேலைப்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டுப் பார்ப்பவரைப் பரவசப்படுத்தி, கண்டிவீதியிலுள்ள அரியாலை உப- தபால் அலுவலகத்திற்கு முன்பாகக் காணப்படும் பிரப்பங்குளத்திற்கருகில் கம்பீரமாகத் திருக்காட்சிதரும் இவ்வாலயத்தின் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

இவ்வாலயத்தில் மூன்று காலநித்திய பூசைகளும், பங்குனித் திங்கள், நவராத்திரி, திருவெம்பாவை முதலிய நைமித்திய பூசைகளும், அடியார்களின் அர்ச்சனை, அபிடேகம், திருப்பொங்கல் முதலானவைகளும் சிறப்பாக நடைபெறுகின்றன.

சர்வசித்திகளையுமளிக்கும் மகாமாரி வலத்திருக்கரத்தில் படமெடுத்தாடும் நல்லநாகச் சுற்றிய உடுக்கையையும், ஒளிவீசும் வீரவாளையும், இடக்கரத்தில் பாசத்தையும் கபால ஓட்டையும் ஏந்தி சிங்காசனத்தில் இருந்து துட்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்தருள் பாலித்தவண்ணம் இவ்வாலயத்தில் வீற்றிருக்குங்காட்சி வாயால் சொல்லமுடியாத திருக்காட்சியாகும்.

பக்தர்வேண்டியவாறேஅவர்களுக்கு அருளளிக்கும் கண்கண்ட தெய்வமாகி, அன்னபூரணியாகவும், ஆனந்த ரூபியாகவும், ரோக நிவாரணியாகவும் அருள் புரிகின்ருள். ஆதலால் இப்பொழுது இவ்வம்மனை மகாமாரிஅம்பாள் என்று கைகூப்பி வணங்குகின்றனர்.

இவ்வருடத் திருவிழா 25. 07. 1986 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்து 9. 08. 86 ஆம் திகதி சனிக்கிழமை வைரவசுவாமி பூசையுடன் முற்றுப்பெறும். தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை காலை5.25 மணிக்கு ஆரம்பமாகும். தீர்த்தம் நாளை வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு நடைபெறும்.

சுண்டிக்குளி,
க. யோகராசா

★ "பிரிட்டன் பொருளாதார ஆதாயத்திற்காக அடிப்படைக் கொள்கைகளை விட்டுக்கொடுக்கிறது"

# பிரிட்டிஷ் அரசுமீது ராஜீவ் கடுமையாக விமர்சனம்

(லண்டன்)

தென் ஆபிரிக்காமீது பொருளாதாரத் தடைகளை விதிக்க மறுத்துவிட்ட பிரிட்டனின் செயலை வன்மையாகக் கண்டித்துள்ள இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, "பிரிட்டன் பொருளாதார ஆதாயத்திற்காக அடிப்படைக் கொள்கைகளை விட்டுக்கொடுக்கிறது; இதனுல் தலைவர் என்ற அந்தஸ்தையும் அது இழக்கிறது" என்று சாடினுர்.

தென் ஆபிரிக்க அரசு மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பது சம்பந்தமாக லண்டனில் நடைபெற்ற ஏழு நாடுகளின் மாநாட்டில் ஒருமனதான தீர்மானம்எதுவும் நிறைவேற்றப்படாததையடுத்துப் பத்திரிகையாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே இந்தியப் பிரதமர் இவ்வாறு கூறினுர்.

தென்னுபிரிக்காமீது தடைகளை விதிப்பதில் சேர்ந்து கொள்ள மறுத்துவிட்ட பிரிட்டனின் நிலைபற்றி விமர்சித்த இந்தியப் பிரதமர் இதனுல் பிரிட்டனுக்குத்தான் நட்டமெனவும், காமன்வெல்த் அமைப்புக்கு இதனுல் இழப்பெதுவும் இல்லை என்றும் கூறினுர்.

உச்சி மாநாட்டால் ஓரளவிற்கே விளைவுகள் ஏற்படும் எனவும் தெரிவித்தஅவர், இவ்வருடப் பிற்பகுதியில் இந் நடவடிக்கைகள் பரிசீலிக்கப்படுமெனவும், இதற்காக முழுஉச்சி மாநாட்டையும் அழைக்கும் எண்ணம் இல்லை எனவும் கூறினுர்.

தென்ஆபிரிக்க அரசின் அச்சுறுத்தலைச் சமாளிக்க ஆபிரிக்க முன்னரங்கு நாடுகளுக்கு எந்தவித இராணுவ உதவிகளும் வழங்கும் எண்ணம் காமன்வெல்த் நாடுகளுக்கு இல்லை எனவும் தெவித்த இந்தியப் பிரதமர், இதனைத் தவிர ஏனைய சகல உதவிகளையும் வழங்க காமன்வெல்த் தயாராக உள்ளதாகவும் கூறினுர்.

பாகிஸ்தானில்

# உடன்தேர்தலை நடாத்துமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பத்து எதிர்க்கட்சிகளின் கூட்டணியான 'ஜனநாயகத்தை மீளமைப்பதற்கான அமைப்பு' இவ்வாண்டு முடிவுக்குள் பொதுத் தேர்தலை நடத்த வேண்டுமென அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

ஒரு முழுநாளும் நடைபெற்ற இவ் அமைப்பின் ஆலோசனைக் கூட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில், செப்ரம்பர் 20ம் திகதிக்கு முன்னர் தேர்தல் நடத்துவதற்கான திகதியை நிர்ணயிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தை மீளமைப்பதற்கான அமைப்பின் பிரமுகர் ஒருவர் இது பற்றி நிருபர்களிடம் தெரிவிக்கையில் தேர்தலை நடத்துவதற்கான திகதியை அரசாங்கம் அதற்குள் நிர்ணயிக்காவிட்டால் புதிய முறையான கிளர்ச்சி நடவடிக்கைகளை தமது அமைப்பு மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார்.

இதுபற்றிகருத்துத் தெரிவித்த பாகிஸ்தானியப் பிரதமர் முகமத் கான் ஜுனேஜோ எதிர்க்கட்சிக் கூட்டணியின் இக் கோரிக்கையைத் தாம் முற்ருக நிராகரிப்பதாகவும் தற்போதைய அரசின் ஐந்துவருட ஆட்சிக்காலம் முடியும் வரையில் தேர்தல் எதுவும் நடைபெருது எனவும் கூறினுர்.

இதேவேளையில் தேர்தலை உடனே நடத்தக்கோரி பாகிஸ்தான் மக்கள் கட்சியுடன் இணைந்து ஜனநாயகத்தை மீளமைப்பதற்கான அமைப்பு பல கண்டனக் கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தவுள்ளது. இம்மாதம் 14ம் திகதி முதல் இவ்வாருன கண்டன ஊர்வலங்கள் நடைபெறவுள்ளன.

# பிலிப்பைன்ஸ் கம்யூ. கெரில்லாக்களுக்கும் அரசுக்கும் இடையே பேச்சுக்கள் ஆரம்பம்!

(மணிலா)

பிலிப்பைன்ஸில் கடந்த பதினேழு வருடங்களாக நடைபெற்று வரும் கம்யூனிஸ்ட் கெரில்லாக்களின் கிளர்சியை முடிவுக்குக் கொண்டு வருமுகமாக கெரில்லாத் தலைவர்களுக்கும் அரசுக்கும் இடையேயான பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளன.

அரசின் சார்பில் விவசாயத் துறை அமைச்சரும் கெரில்லாக்களின் சார்பில் இரண்டு பிரதிநிதிகளும் இது சம்பந்தமாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டார்கள்.

முதல்நாள் சுமார் மூன்றரை மணி நேரம் நடைபெற்ற பேச்சுக்களின் போது, தொடர்ந்து பேச்சுக்கள் நடத்துவதற்கான நிகழ்ச்சி நிரலும், பேச்சுவார்த்தைகளை எங்கே வைத்துக்கொள்வது, எவ் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதென்பது பற்றியும் ஆராயப்பட்டது.

இப்பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற அதே தினத்தில் மிந்தனு தீவில் இடம்பெற்ற மோதலொன்றில் ஒன்பது கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதாக பிலிப்பைன்ஸ் பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இங்குள்ள மிந்தனு தீவுப் பகுதி பொரும்பாலும் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கு முன்னர் போர் நிறுத்தம் ஒன்றை இருபகுதியினருக்கும் இடையே கொண்டு வருவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

## போரில்...

—4ம் பக்கத் தொடர்ச்சி

போரில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தவர்கள் தவருன வழியில இட்டுச் செல்லப்பட்டவர்கள் ஆவர். அப்படிப்பட்டோர் வாழ்க்கையின் பிரதான நீரோட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியிருக்கிறது. சிலர் அரசியல் வாழ்க்கையின் பிரதான நீரோட்டத்திற்கூடப் பிரவேசிக்கும் நம்பிக்கை உடையோராக இருக்கலாம்.

சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் ஒரு தீர்வு காண்பதல் அக்கறை உண்டாதல் வேண்டும் அதுவரை இப்பிரச்சினைகள் தீர்க்கப்படமாட்டா. அதனுலேயே நாம் காணும் தீர்வானது அதன் பிரதான பங்காளிகளின் பார்வையில் மாத்திரமலலாது, சம்பந்தப்பட்ட சமுதாயங்களின் பெரும்பாலானுவர்களது பார்வையிலும் கூட நியாயமானதாகத் தோன்றுதல் எமக்கு அவசியமாகும். அதன் காரணமாகவே, வெற்றி, தோல்வி என்ற பதப் பிரயோகங்களை நான் தவிர்த்துக் கொள்கிறேன்.

வினு: தென்னிலங்கை மக்களிற பெரும்பாலானேரைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர்கள் சமாதானம் வேண்டி விரும்பி நிற்கிருர்களா?

பதில்: உலகளாவ, எப்பொழுதும் சமாதானத்தையே மானிட சமுதாயம் வேண்டி நிற்கும். இலங்கைப் பெரும்பான்மைச் சமுதாயத்தினர் அரசின் பிரேரணைகளை ஆலோசனைகளைச் செவி மடுக்க விரும்புபவர்கள். அரசின் தர்க்கம் அவர்களது மனதில் சாதகமான பிரதிபலிப்பை ஏற்படுத்துகிறது. அதற்கு மாற்று வழி என்ன? அதற்குக் கண்மூடித்தனமான பதில் நடவடிக்கையில் அவர்கள் இறங்குபவர்களல்லர். அக்கறைகளின் சமபங்கீடு நியாயமானது எனும் எண்ணங் கொண்டு இலங்கை அரசின் பிரேரணைகளை அவர்கள் அணுகி நோக்கத் தயாராக உளளனர்.

வினு: ஸ்ரீ. ல. சு. க. பற்றி ஏதாவது விமர்சன உரைகள?

பதில்: அதையிட்ட விமர்சனம் தேவைப்படாது. ஏன் தெரியுமா? இதுவரை, இவற்றையிட்டு விமர்சிக்காது இருப்பதையே அவர்கள்(ஸ்ரீ லங்க சுதந்திரக் கட்சியினர்) மிக விரும்பிச் செயற்பட்டுமுள்ளார்கள்.

(தொடரும்)

## போதை வஸ்து அபாயம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் ஒவ்வொரு ஆறு மணித்தியாலங்களுக்கும் போதை வஸ்துக்கு அடிமையான ஒருவர் மரணிக்கிருர்.

இவ் விபரம் இங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு வஸ்துக்கு அடிமையானோரின் சராசரி வயது 18 - 25 ஆகும்.

ஒவ்வொரு ஆண்டிலும் நியூயோர்க்கில் போதை வஸ்துக்கு அடிமையான பெற்றேர்களுக்குப் பிறக்கும் போதை வஸ்துக்கு அடிமையாகக்கூடிய பிள்ளைகளின் எண்ணிக்கை சுமார் மூவாயிரம்!

## ஊரெழு ஸ்ரீ மனோன்மணி அம்பாள்

எண்ணத்தின் கருவுருவே ஏகாந்தி
நின்னடியார் ஏத்தங் காண
வண்ணமொளிர் மனோன்மணியாய் வடிவெடுத்தே
ஆட்கொண்டாய் வாழ்ந்தோம் நீயே
பண்ணுள்ளே பாரினிலே பத்தருள்ளக்
கமலமதில் பாதந் தீட்டிக்
கண்ணுதலான் கருணை நெறி காட்டினையே
கனகத்தாள் கண்டோம் போற்றி.

ஊர்பூக்க நாப்பண்ணே உவந்தெழுந்தே
அழகொழுக ஊர்ந்தே யருட்
கார் பூத்த கண்ணியவள் காக்கு நெறி
அருள் மழையாய்க் கடிதே பாய
நார் கோத்த மாலையென நாரியொடு
நாமேயருள் நயனங் காண
தேர்ரோட்ட இவர்ந்தனையோ தேவாதி
தேவியுந்தன் திருவடி போற்றி

ச. கதிரவேலு

(ஊரெழு அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் தேர்த் திருவிழா இன்று)

ஈழமுரசு

## கரடிப்போக்கு பாலம் அமைப்பு வேலை முறியடிப்பு

அண்மையில் போராளிகளால் தகர்க்கப்பட்ட கிளிநொச்சி கரடிப் போக்குப் பாலத்தைத் திருத்துவதற்கு இராணுவத்தினர் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இதனைத் திருத்துவதற்காக இராணுவத்தினர் மிகுந்த சிரமத்துடன் கொண்டுவந்து போட்டுவிட்டுச் சென்ற இரும்புக் கேடர்கள் அடுத்த நாள் மாயமாக மறைந்துவிட்டனவாம். இராணுவத்தினரின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவே போராளிகளால் இப்பாலம் சில மாதங்களுக்கு முன்னர் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

நேற்றுக் காலையில் நடைபெற்றது:

# வயாவிளான் முகாமின் பல பொருட்கள் ஹெலிகப்டரில் ஏற்றிச் செல்லப்பட்டன

(அளவெட்டி)

வயாவிளான் இராணுவ முகாமிலிருப்பவர்களினால் பாவிக்கப்பட்ட பல பொருட்கள் ஹெலிகப்டர் மூலம் நேற்று பலாலி இராணுவ முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டதை அவதானிக்கக் கூடியதாயிருந்தது.

நேற்றுக் காலை ஏழரை மணி முதல் நண்பகல் வரை பல தடவைகளாக வயாவிளான் மினி முகாமில் வந்திறங்கிய ஹெலிகப்டரில் சீருடை தரித்தவர்களால் அங்கிருந்த பொருட்கள் ஏற்றப்பட்டன.

இம்மினி முகாம் சுற்றுடலின் நாற்திசையிலும் ஆயுதம் தரித்த போராளிகளினால் சுற்றிவளைக்கப்பட்டிருப்பதால் இம் முகாமிலிருப்பவர்கள் முகாமைவிட்டு வெளியேற முடியாத அவல நிலையிலேயே இருக்கின்றனர்.

இம் முகாம் விரைவில் மூடப்படக் கூடிய அறிகுறிகளும் இங்கு காணப்படுகின்றன.

## வடபகுதி ஆஸ்பத்திரி மருந்து வவுனியாவில் தவமிருக்கிறது

யாழ். மாவட்ட அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கென சுகாதாரதிணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட ஐந்து லொறிகள் அடங்கிய மருந்து வகைகள் கடந்த இரண்டு மாதங்களாக வவுனியாவில் தவம் கிடக்கின்றன.

இவற்றை இங்கு கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டும் அவை கைகூடுவதாக தெரியவில்லை.

இந்தமருந்துகளைவிடமேலும் பல மருந்துகள் சுகாதார திணைக்களத்தினால் அனுப்புவதற்கு கொழும்பில் தயார் நிலையில் உள்ளன. ஆனால் வவுனியாவில் இருப்பவற்றை யாழ்ப்பாணம் கொண்டுவந்தாலே அவையும் அனுப்பப்படும் எனதெரிவிக்கப்படுகிறது.

உயர் அதிகாரி உறுதி

## நயினை உற்சவ காலத்தில் ராணுவம் உதவி வழங்கும்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது பக்தர்களின் வசதிகளை முன்னிட்டு படகுச் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கொடியேற்ற ஆரம்பத்தை தொடர்ந்து ஆலய அறங்காவல் சபையினர் நயினாதீவு முகாமில் உயரதிகாரி மேஜர் ராஜபக்ஸவை சந்தித்து இத்திருவிழா அமைதியாக நடைபெற ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டனர். அவரும் தமது ஆதரவு எந்நேரமும் கிடைக்கும் என உறுதியளித்தார்.

இதேவேளை அம்பாள் அடியார்களும் சம்பந்தப்பட்ட தரப்பினரும் இவ்வருட உற்சவம் எதுவித தடையுமின்றி இனிதே நிறைவேற வேண்டிய ஒத்துழைப்பு வழங்குமாறு மேற்படி அறங்காவல் சபை சார்பில் அதன் தலைவரும், யாழ். செயலக பொதுசனத் தொடர்பு அதிகாரியுமான திரு. த. குலசேகரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மின் இணைப்பு துண்டிப்பு

(சுன்னாகம்)

கந்தரோடை, சங்குவேலி, சுன்னாகம் பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்று வந்தவர்களது தொடர்புகள் நேற்று முன்தினம் இரவு வேளையில் மின் ஊழியர்களாலும், உத்தியோகத்தர்களாலும், இளைஞர்குழுவாலும் துண்டிக்கப்பட்டது- முற்றிலும் எதிர்பாராத இந் நடவடிக்கையால் பலவீட்டுச் சொந்தக்காரர்களும் மின் தொடர்பு சாதனங்களை இழந்துள்ளனர்.


## மரண அறிவித்தல்

### ஜோன்டி கிளமன் பவுன்

நெடுந்தீவைச் சேர்ந்தவரும், உருத்திரபுரத்தில் வசித்து வந்தவருமான ஜேம்ஸ் (யேசுநாயகம்) என்பவரின் மகன் ஜோன்டி கிளமன் பவுன் (லங்கா, மனோகரன்) என்பவர் காலமாகிவிட்டார். நல்லடக்கம் 01. 08. 1986 அன்று கொழும்பில் நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இதை தெரிவித்துக் கொள்கிறோம்.

—பெற்றோர், சகோதரர்கள்.

தகவல்:
யே. கெனடி,
162, D - 10, உருத்திரபுரம். 05-8-86 B/1446


வெளிநாடு செல்லும்

## வடபகுதி இளைஞர்களுக்கு பத்திரம வழங்கல் நிறுத்தம்

வடபகுதியில் இருந்து வெளிநாடுகளுக்கு செல்லும் இளைஞர்கள் யாழ். பொலிஸ் நிலையத்தில்பெற்றுவந்த நற்சான்றுபத்திரம் மேலிடத்தின் உத்தரவையடுத்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வெளிநாடு செல்லும் வடபகுதி இளைஞர்கள் இதனால் பல கெடுபிடிகளுக்கு உள்ளாக வேண்டியுள்ளது.

இப்பத்திரம் இல்லாமல் சில சமயம் தமது பயணத்தையும் கைவிடவேண்டிய நிலையும் உருவாகிறது.

## கி. சேவகர்களை முகாமுக்கு அழைப்பது நிறுத்தவேண்டும்

கிராம சேவகர்கள் இராணுவமுகாம்களுக்கு அழைக்கப்படுவதை தவிர்ப்பதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட கிராம சேவையாளர்கள் கிளிநொச்சி அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளனர்.

நேற்று நடந்த கிளிநொச்சி மாவட்ட கிராமசேவையாளர் சங்க பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமையவே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் கிளிநொச்சியில் நடந்த அசம்பாவிதத்தின்போது ஷெல் தாக்குதலுக்குள்ளாகி மரணமான கிராமசேவை அலுவலர் செ. வேலாயுதத்திற்கு தகுந்த நட்ட ஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும், காரணமின்றி பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட கிராமசேவை அலுவலர் சி. தனபாலசிங்கத்திற்கு வேலை வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டதிற்கான காரணம் தெரிவிக்கப்படவேண்டுமெனவும் இச்சங்கம் அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளது.

### தொண்டமானாறு...

அப்போது பிரிகேடியர் தாம் பாதுகாப்பு அளிப்பதாகவும் திருவிழா பூஜைகளை நடத்தும்படியும் பணித்திருந்தார்.

ஆனால் சந்நிதி ஆலயம், அதன் சுற்றுடல் இருக்கும் நிலையில் பூஜைகளையோ திருவிழாக்களையோ நடத்த முடியாது என்ற சர்ச்சை ஆலய தர்மகர்த்தாக்களிடையேயும், பொது மக்களிடையேயும் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்ட பட்சத்தில் நேற்று முன்தினம் இரவு தொண்டமானாறு பிள்ளையார் கோவில் முன்றலில் பொது மக்கள், கூட்டம் ஒன்றினை கூட்டி ஆலய தர்மகர்த்தாக்களுடன் உரையாடினர்.

அக் கூட்டத்தில் ஆலயத்தில் பிராயச் சித்தங்கள், அனுஷ்டானங்கள் நடைபெற்ற பின்பே பூஜைகள் உற்சவங்கள் நடைபெறவேண்டும். அத்தோடு கடந்த மூன்று நாட்களின் முன்னர் ஆலய வீதியில் வயோதிபர் ஒருவர் சுடப்பட்டதும், பாலத்தினை புனரமைப்பதற்காக இராணுவ முகாம் பகுதியில் புல்டோசர்கள் வந்ததாகவும் இங்கு சுடப்பட்டதில் இருவர் காயமடைந்தது பற்றியும் அக்கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இக் காரணங்களைச் சுட்டிக்காட்டி ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் உயிர்களுக்கு உத்தரவாதமுமில்லை என்பதால் சந்நிதி ஆலய உற்சவம் நடைபெறுவதில்லை எனவும், தொண்டமானாறு ஆற்றங்கரையிலுள்ள இராணுவ முகாம் அகற்றப்பட்டாலொழிய ஆலயத்தில் பூஜைகள் கூட நடைபெறுவதற்கான சாத்தியம் எதுவும் இல்லையெனவும் முடிவு செய்யப்பட்டது.

## உறுப்பினர் கைது

பொலநறுவையில் நேற்றும் ஒரு ஜனதா விமுக்தி பெரமுன உறுப்பினர் கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து பல துப்பாக்கி ரவைகளும பொலிஸாரினால் மீட்கப்பட்டன.

### அங்கீகார...

டம் மிகத்தீவிரமடைந்துவிட்ட இன்றைய சூழநிலையில் தமிழீழப்பிராந்தியங்களின் சிவில நிர்வாகம் முற்று முழுதாக ஸ்தம்பிதமடைந்து விட்டது. இந்நிலையில் தமிழீழத்தில் சட்டம். ஒழுங்குகள் சீர்குலைந்து வருகின்றன. சமுதாய ரீதியில முழுச் சமூகத்திற்குமே தீங்கு விளைவிக்கக் கூடிய செயற்பாடுகள் மலிந்து வருகின்றன.

இச்சட்ட விரோத சாராயத் தவறணைகளில் போதைவஸ்து விற்பனையும், விபச்சாரமும், தவறணைகளுடன் கூடிய மினி சினிமாக்களில் ஆபாசப் படங்களும் காண்பிக்கப்பட்டு வருவதுடன் மேலும் பல சமூக விரோதச் செயற்பாடுகளும் இடம் பெறுகின்றன. மேலும் மக்கள் செறிந்து வாழும் இடங்களிலும், சந்திகளிலும் அதிக மதுபோதையுடன இரவு வேளைகளில் நின்று வீடு வீடாக காடைத்தனம் புரிவதையும் அவதானிக்க முடிகின்றது.

இத்துடன் கூட்டமாகக் கூடி சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடும் ஓர் புதிய சமூக விரோதக் கும்பல் இச்சட்ட விரோத சாராயத் தவறணைகள் மூலம் உருவாகின்றது. இக் கும்பல் வீதிகளில் அசிங்கமாகவும் அநாகரிகமாகவும் நடப்பதைக் காணலாம். இராணுவ அடக்குமுறை பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்ட இந்நிலையில் இப்புதிய சமுதாய விரோதக் காரணியிலிருந்து எம்மக்களைக் காக்கும், விடுவிக்கும் சமூகப் பொறுப்பு விடுதலையை முன்னெடுக்கும் அனைத்து சக்திகளுக்குமுள்ளது.

இலங்கை பிரச்சினை

## சட்ட சபை அவை 11ல் கூடும்

(புதுடில்லி)

இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இராணுவ நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி ஜெயவர்த்தன கூறியுள்ளதால் எழுந்துள்ள நிலைமை குறித்து சட்ட சபைகளின் அவை இம்மாதம் 11ம் திகதி விவாதம் நடத்தும்.

இது பற்றி கேள்வி நேரத்தின்போது அகில இந்திய அ. தி. மு. க. மக்களவைத் தலைவர் திரு. குழந்தைவேலு கேட்டபோதே லோக சபைத் தலைவர் திரு. பல்ராம் ஜாக்கர் இவ்வாறு தெரிவித்தார்.

## படிவங்களுக்கு தட்டுப்பாடு

யாழ். பிரதேசத்தில் உள்ள சில அரச அலுவலகங்களில் உபயோகிக்கும் படிவங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கொழும்பில் இருந்து அனுப்பப்படாததே இதற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

## நிறை குறைவான பாண் விற்பனை

பருத்தித்துறை பகுதியில் விநியோகிக்கப்படும் பாணின் நிறை குறைவாக இருப்பதாக பருத்தித்துறை பிரஜைகள் குழுவுக்கு பொதுமக்கள் முறையிட்டுள்ளனர். இதனால் அப்பகுதி பேக்கரி உரிமையாளர் சரியான நிறையுடைய பாணை விநியோகம செய்யுமாறு கேட்கப்படுகின்றனர்.

## கிராமிய உழைப்பாளர் சங்கம்

வடபிராந்திய கிராமிய உழைப்பாளர் சங்கமும், வறிய கூலி விவசாயிகள் தொழிலாளர் சங்கமும் பத்தாம் திகதி முதல் ஒன்றிணைந்து கிராமிய உழைப்பாளர் சங்கம் என்ற பெயரில இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றுக்கு மேற்பட்ட தாபனங்கள இயங்குவதினால் மக்களின வெகுஜன சக்தி பிளவுபடுத்தப்பட்டு பலவீனப்படுவதை தவிர்ப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இது சம்பந்தமாக வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாளைய நிகழ்ச்சி

தொலபுரம மத்தி இந்து இளைஞர் மன்றத்தின வருடாந்தப் பொதுக் கூட்டம் தொல்புரம் மத்தி கொட்டடிப்பதி அருள்மிகு ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில நாளை வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது. திரு. நா. முருகையா தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை நிர்வாகப் பணிப்பாளர் திரு. இ தவகோபால் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுவார்.

## பலர் பலி

நேற்று அதிகாலை பீகாரில் கடுகதி புகையிரதம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். விபத்துக்குள்ளான புகையிரதத்தின் பயணிகள் பெட்டி இரண்டும், என்ஜினும் அருகிலிருந்த ஆறு ஒன்றினுள் வீழ்ந்து மூழ்கியுள்ளன.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 7-8-1986 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22487